தி இந்து
தமிழால் இணைவோம்

# ‘ரீச்’ அமைப்பு சார்பில் சென்னையில் 35 நட்சத்திர மையங்கள்: காசநோயாளிகளுக்கு மாதம் ரூ.500 உதவி - அரசு திட்டத்தை முதல்வர் பழனிசாமி தொடங்கி வைத்தார்

**சென்னை**




சென்னை மாநகராட்சி மற்றும் தேசிய காசநோய் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ‘ரீச்’ அமைப்பு நிறுவியுள்ள 35 நட்சத்திர மையங்களை நேற்று தொடங்கி வைத்து காசநோயாளிகளுக்கு உதவித் தொகையை வழங்குகிறார் முதல்வர் கே.பழனிசாமி. உடன் சுகாதாரத்துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர், சுகாதாரத்துறை முதன்மைச் செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன், ‘ரீச்’ அமைப்பின் இயக்குநர் டாக்டர் நளினி கிருஷ்ணன் உள்ளிட்டோர். - படம்: க.ஸ்ரீபரத்

**Published :** 25 Mar 2018 | 10:14 IST
**Updated :** 25 Mar 2018 | 10:14 IST

காசநோய் இல்லா சென்னையை உருவாக்கும் நோக்கில், மாநகராட்சி மற்றும் தேசிய காசநோய் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ‘ரீச்’ அமைப்பு நிறுவியுள்ள 35 நட்சத்திர மையங்களை முதல்வர் கே.பழனிசாமி தொடங்கி வைத்தார். அத்துடன் காசநோயாளிகளுக்கு அரசு சார்பில் மாதம் ரூ.500 உதவித் தொகை வழங்கும் திட்டத்தையும் அவர் தொடங்கிவைத்தார்.

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு, சென்னை மாநகராட்சி மற்றும் தேசிய காசநோய் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ‘ரீச்’ (REACH) தொண்டு நிறுவனம் காசநோய் இல்லா சென்னையை உருவாக்கும் நோக்கில் 35 நட்சத்திர மையங்களை நிறுவியுள்ளது. இதன் தொடக்க விழா சென்னை அடையாறு பசுமைவழிச் சாலையில் நேற்று நடந்தது.

நட்சத்திர மையங்களை முதல் வர் கே.பழனிசாமி தொடங்கி வைத்து, அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரீச் அமைப்பின் இயக்குநர் டாக்டர் நளினி கிருஷ்ணனிடம் வழங்கினார். தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் காசநோயாளிகளைக் கண்காணிக்கும் பணியை இந்த நட்சத்திர மையங்கள் மேற்கொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.

காசநோய் தடுப்புப் பிரிவில் பணியாற்றும் 1,412 முதுநிலை மேற்பார்வையாளர்களுக்கு கையடக்கக் கணினிகள் வழங்கும் திட்டத்தையும் முதல்வர் தொடங்கி வைத்தார். காசநோயாளிகளுக்கு மாதம் ரூ.500 உதவித் தொகை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்த முதல்வர், காசநோயைக் கண்டறியும் அதிநவீன கருவியுடன் கூடிய 2 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

விழாவில் முதல்வர் பேசியதாவது: உலக காசநோய் தினம் ஆண்டுதோறும் மார்ச் 24-ல் கடைபிடிக்கப்படுகிறது. ‘காசநோய் இல்லா உலகம் - தலைவர்கள் தேவை’ என்பதே இந்த ஆண்டு காசநோய் தினத்தின் வாசகம்.

2030-ம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத உலகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சர்வதேச அளவில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நமது பிரதமர் 2025-க்குள் காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். அதற்கு தமிழக அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும். உரிய முறையில் சிகிச்சை மேற்கொண்டால் காசநோயை பூரணமாக குணப்படுத்தலாம்.

இவ்வாறு முதல்வர் கூறினார்.

விழாவில் சுகாதாரத் துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர், துறைச் செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணன், மாநில காசநோய் அலுவலர் (பொறுப்பு) கே.செந்தில்ராஜ், மருத்துவம், ஊரக நலப் பணிகள் இயக்குநர் இன்பசேகரன், நோய் தடுப்பு மருந்து இயக்குநர் கே.குழந்தைசாமி, தேசிய காசநோய் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் ஸ்ரீகாந்த் திரிபாதி, ரீச் தொண்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் டாக்டர் ரம்யா அனந்தகிருஷ்ணன், திட்ட இயக்குநர் டாக்டர் ஆர்.ராதா, சுகம் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் டாக்டர் சத்தியகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.